## தமிழ்நாடு அரசு - இந்து சமய அறநிலையத்துறை

## அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், திருத்தணிகை

## திருத்தணிகை வட்டம், திருவள்ளூர் மாவட்டம் - 631 209.

**ந.க.எண்.207/2025/அ1/ நாள்.30.09.2025**

## வேலை வாய்ப்பு கோரும் விளம்பர அறிவிப்பு

திருவள்ளூர் மாவட்டம், திருத்தணிகை வட்டம் மற்றும் நகர், அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில் மற்றும் அதன் உபத்திருக்கோயில்களில் கீழ்க்காணும் அட்டவணையில் குறிப்பிட்டுள்ள விவரப்படியான காலி பணியிடங்களுக்கு, பணியாளர்களை தற்காலிகமாக பணி நியமனம் செய்ய இந்து மதத்தை சார்ந்த தகுதி வாய்ந்த நபர்களிடமிருந்து நிபந்தனைகளுக்குட்பட்டு 05.11.2025– பிற்பகல் 5.45-மணி வரை விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. விண்ணப்ப படிவம், தகுதி விவரங்கள், நிபந்தனைகள் மற்றும் இதர விவரங்கள் அடங்கிய விண்ணப்ப படிவத்தினை ரூ.100/- திருக்கோயில் தலைமை அலுவலகத்தில் செலுத்தி அலுவலக நாட்களில், அலுவலக நேரங்களில் 04.11.2025 பிற்பகல் 5.45 மணி வரை நேரில் வந்து கேட்டு தெரிந்து பெற்றுக் கொள்ள கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

### காலிப்பணியிடங்கள் விவரம்

| பதவி பெயர் / எண்ணிக்கை / சம்பள விகிதம் | கல்வித்தகுதி மற்றும் இதர தகுதிகள் |
|---|---|
| **திருத்தணிகை அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில் (முதன்மை திருக்கோயில்)** | |
| கூர்க்கா -01 பணியிடம் சம்பள விகிதம் 15900-50400 (LEVEL -17/1) | 1.தமிழில் படிக்க மற்றும் எழுத தெரிந்திருக்க வேண்டும்.<br>2.திருக்கோயில் பழக்க வழக்கம் / நடைமுறைகள் தெரிந்திருத்தல் வேண்டும் |
| இரவு காவலர் -02 பணியிடம் சம்பள விகிதம் 15900-50400 (LEVEL -17/1) | 1.தமிழில் படிக்க மற்றும் எழுத தெரிந்திருக்க வேண்டும்.<br>2.எட்டாம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.<br>3.திருக்கோயில் பழக்க வழக்கம் / நடைமுறைகள் தெரிந்திருத்தல் வேண்டும் |
| மிருதங்கம் - 01, சம்பள விகிதம் 18500-58600 (LEVEL - 22/1) | 1. தமிழில் எழுத படிக்க தெரிந்திருத்தல் வேண்டும்.<br>2. யாதொரு சமய நிறுவனங்கள்/அரசு நிறுவனங்கள்/யாதொரு அரசால் அங்கீகரிக்கப்பட்ட யாதொரு நிறுவனங்களால் நடத்தப்படும் இசைப்பள்ளிகளிலிருந்து இது தொடர்புடைய துறையில் தேர்ச்சி பெற்றதற்கான சான்று<br>3. திருக்கோயில் பழக்க வழக்கம் / நடைமுறைகள் தெரிந்திருத்தல் வேண்டும் |
| புஜங்கம் - 01, பணியிடம் சம்பள விகிதம் 18500-58600 (LEVEL - 22/1) | 1. தமிழில் எழுத படிக்க தெரிந்திருத்தல் வேண்டும்.<br>2. யாதொரு சமய நிறுவனங்கள்/அரசு நிறுவனங்கள்/யாதொரு அரசால் அங்கீகரிக்கப்பட்ட யாதொரு நிறுவனங்களால் நடத்தப்படும் இசைப் பள்ளிகளிலிருந்து இது தொடர்புடைய துறையில் தேர்ச்சி பெற்றதற்கான சான்று<br>3. திருக்கோயில் பழக்க வழக்கம் / நடைமுறைகள் தெரிந்திருத்தல் வேண்டும் |
| வேத பாராயணம் - 01 பணியிடம் சம்பள விகிதம் 15700-50000) (LEVEL - 17/1) | 1. தமிழில் எழுத படிக்க தெரிந்திருத்தல் வேண்டும்.<br>2. யாதொரு சமய நிறுவனங்கள்/அரசு நிறுவனங்கள்/யாதொரு அரசால் அங்கீகரிக்கப்பட்ட யாதொரு நிறுவனங்களால் நடத்தப்படும் ஆகமப்பள்ளி அல்லது வேதபாடசாலையில் தொடர்புடைய துறையில் குறைந்தபட்சம் மூன்றாண்டு படிப்பினை மேற்கொண்டதற்கான சான்றிதழை பெற்றிருக்க வேண்டும்.<br>3. வேத ஆகமங்கள் கற்றிருத்தல் வேண்டும் |

| | |
|---|---|
| | 4. திருக்கோயில் பழக்க வழக்கம் / நடைமுறைகள் தெரிந்திருத்தல் வேண்டும் |
| குடைக்காரர்- 01 பணியிடம்<br>சம்பள விகிதம் 10000-31500<br>(LEVEL - 10/1) | 1.தமிழில் படிக்க மற்றும் எழுத தெரிந்திருக்க வேண்டும்.<br>2.எட்டாம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.<br>3.திருக்கோயில் பழக்க வழக்கம் / நடைமுறைகள் தெரிந்திருத்தல் வேண்டும் |
| மாலைக்கட்டி- 01 பணியிடம்<br>சம்பள விகிதம் 10000-31500<br>(LEVEL - 10/1) | 1.தமிழில் படிக்க மற்றும் எழுத தெரிந்திருக்க வேண்டும்.<br>2.திருக்கோயில் பழக்க வழக்கம் / நடைமுறைகள் தெரிந்திருத்தல் வேண்டும்<br>3.பூஜைகள் மற்றும் உற்சவங்களுக்கு தெய்வங்களை அலங்கரிப்பதற்காக மாலைகள் கட்டும் திறன் பெற்றிருக்க வேண்டும். |
| தமிழ்ப்புலவர் - 01 பணியிடம்<br>சம்பள விகிதம் 18500-58600<br>(LEVEL -22/1) | 1.தமிழில் படிக்க மற்றும் எழுத தெரிந்திருக்க வேண்டும்.<br>2.திருக்கோயில் பழக்க வழக்கம் / நடைமுறைகள் தெரிந்திருத்தல் வேண்டும்<br>3.யாதொரு பல்கலை கழகத்தில் அல்லது அதற்கு இணையான தமிழில் B.Lit அல்லது M.A. அல்லது M.Lit பட்டம் கல்வித் தகுதி பெற்றிருத்தல் வேண்டும்.<br>4.திருமுறைகள் ஒப்புவித்தலில் திறன் பெற்றிருக்க வேண்டும். |
| சமய பிரசங்கி - 01 பணியிடம்<br>சம்பள விகிதம் 18500-58600<br>LEVEL -22/1) | 1. தமிழில் எழுத படிக்க தெரிந்திருத்தல் வேண்டும்.<br>2. சமய நிறுவனங்கள்/அரசு நிறுவனங்கள்/ஏனைய யாதொரு நிறுவனங்களால் நடத்தப்படும் ஆகமப்பள்ளி அல்லது வேதபாடசாலையில் ஓராண்டு படிப்பினை மேற்கொண்டதற்கான சான்றிதழை பெற்றிருக்க வேண்டும்.<br>3. திருக்கோயில் பழக்க வழக்கம் / நடைமுறைகள் தெரிந்திருத்தல் வேண்டும் |
| சித்த மருத்துவர் – 01 பணியிடம்<br>சம்பள விகிதம் 36700-116200<br>(LEVEL -35/1) | 1. திருக்கோயில் பழக்க வழக்கம் / நடைமுறைகள் தெரிந்திருத்தல் வேண்டும்<br>2.சித்த மருத்துவத்தில் பட்டப்படிப்பும் மற்றும் அறுவை சிகிச்சையில் பட்டமும் (B.S.M,S) பெற்றிருக்க வேண்டும்.<br>3.தமிழ்நாடு சித்த மருத்துவ கவுன்சில் பதிவு பெற்றிருக்க வேண்டும். |
| ஓட்டுநர் -02 பணியிடம்<br>சம்பள விகிதம் 18500 -58600)<br>(LEVEL - 22/1) | 1. எட்டாம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும் அல்லது இணையான அரசால் அங்கீகாரம் பெற்ற தேர்வில் தேர்ச்சி<br>2. இலகு ரக வாகனம் மற்றும் கனரக வாகனம் ஓட்டுநர் உரிமம் மற்றும் முதலுதவி குறித்த சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்.<br>3. ஓட்டுநராக பணியாற்றியதற்கான ஒரு வருடம் முன் அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.<br>4. திருக்கோயில் பழக்க வழக்கம் / நடைமுறைகள் தெரிந்திருத்தல் வேண்டும் |
| செவிலியர் - 01 பணியிடம்<br>தொகுப்பூதியம் ரூ.14,000/-<br>(ஒப்பந்த ஊதியம்) | 1.திருக்கோயில் பழக்க வழக்கம் / நடைமுறைகள் தெரிந்திருத்தல் வேண்டும்<br>2.செவிலியர் (NURSING)B.Sc (or) Diploma in Nursing பட்டயம் சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும்.<br>3.செவிலியர்/பேறுகால செவிலியர் சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும். |
| கணினி இயக்குபவர்-<br>02 பணியிடம்<br>தொகுப்பூதியம் ரூ.15,000/- | 1.திருக்கோயில் பழக்க வழக்கம் / நடைமுறைகள் தெரிந்திருத்தல் வேண்டும்<br>2.அரசால் /அரசால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தால் வழங்கப்பட்ட கணினி அறிவியலில் பட்டயப்படிப்பு சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும்.<br>3.தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் தட்டச்சு சான்றிதழ் (Computer Automatiion) பெற்றிருக்க வேண்டும். |
| **உபகோயில் – திருத்தணி, அருள்மிகு கோட்டா ஆறுமுக சுவாமி திருக்கோயில்** | |
| நாதஸ்வரம் - 01 பணியிடம்<br>சம்பள விகிதம் 15700-50000<br>(LEVEL - 16/1) | 1. தமிழில் எழுத படிக்க தெரிந்திருத்தல் வேண்டும்.<br>2. யாதொரு சமய நிறுவனங்கள்/அரசு நிறுவனங்கள்/யாதொரு அரசால் அங்கீகரிக்கப்பட்ட யாதொரு நிறுவனங்களால் நடத்தப்படும் இசைப்பள்ளிகளிலிருந்து இது தொடர்புடைய துறையில் தேர்ச்சி பெற்றதற்கான சான்று |

| | |
|---|---|
| | 3. திருக்கோயில் பழக்க வழக்கம் / நடைமுறைகள் தெரிந்திருத்தல் வேண்டும் |
| **உபகோயில் – திருத்தணி, அருள்மிகு சப்த கன்னியம்மன் திருக்கோயில்** | |
| தூர்வை (துப்புரவாளர்) – 01 பணியிடம்<br>சம்பள விகிதம் (10000-31500)<br>(LEVEL - 10/1) | 1.தமிழில் படிக்க மற்றும் எழுத தெரிந்திருக்க வேண்டும்.<br>2.எட்டாம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.<br>3.திருக்கோயில் பழக்க வழக்கம் / நடைமுறைகள் தெரிந்திருத்தல் வேண்டும் |
| **உபகோயில் – மத்தூர், அருள்மிகு மகிஷாசூரமர்த்தினியம்மன் திருக்கோயில்** | |
| தட்டச்சர்– 01 பணியிடம்<br>சம்பள விகிதம் (15300-48700)<br>(LEVEL - 15/1) | 1.பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்/ அரசால் அங்கீகரிக்கப்பட்ட அதற்கு இணையான கல்வித் தகுதி பெற்றிருக்க வேண்டும்.<br>2.அரசு தொழில்நுட்ப தட்டச்சர் தேர்வில் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும்.<br>3.தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் முதுநிலை தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும்.<br>4.கணினி பயன்பாடு மற்றும் அலுவலக தானியக்கத்தில் சான்றிதழ் படிப்பில் தேர்ச்சி அல்லது அதற்கு இணையான அரசால் அங்கீகரிக்கப்பட்ட படிப்பில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். (Computer Automation)<br>5. திருக்கோயில் பழக்க வழக்கம் / நடைமுறைகள் தெரிந்திருத்தல் வேண்டும் |
| பலவேலை – 01 பணியிடம்<br>சம்பள விகிதம் (11600-36800)<br>(LEVEL - 12/1) | 1.தமிழில் படிக்க மற்றும் எழுத தெரிந்திருக்க வேண்டும்.<br>2.எட்டாம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.<br>3.திருக்கோயில் பழக்க வழக்கம் / நடைமுறைகள் தெரிந்திருத்தல் வேண்டும் |
| **உபகோயில் – சந்தானவேணுகோபாலபுரம்,அருள்மிகு சந்தானவேணுகோபால சுவாமி திருக்கோயில்** | |
| பலவேலை – 01 பணியிடம்<br>சம்பள விகிதம் (11600-36800)<br>(LEVEL - 12/1) | 1.தமிழில் படிக்க மற்றும் எழுத தெரிந்திருக்க வேண்டும்.<br>2.எட்டாம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.<br>3.திருக்கோயில் பழக்க வழக்கம் / நடைமுறைகள் தெரிந்திருத்தல் வேண்டும் |
| **உபகோயில் – கரிம்பேடு, அருள்மிகு நாதாதீஸ்வர சுவாமி திருக்கோயில்** | |
| நாதஸ்வரம் - 01 பணியிடம்<br>சம்பள விகிதம் 15700-50000<br>(LEVEL - 16/1) | 1. தமிழில் எழுத படிக்க தெரிந்திருத்தல் வேண்டும்.<br>2. யாதொரு சமய நிறுவனங்கள்/அரசு நிறுவனங்கள்/யாதொரு அரசால் அங்கீகரிக்கப்பட்ட யாதொரு நிறுவனங்களால் நடத்தப்படும் இசைப்பள்ளிகளிலிருந்து இது தொடர்புடைய துறையில் தேர்ச்சி பெற்றதற்கான சான்று<br>3. திருக்கோயில் பழக்க வழக்கம் / நடைமுறைகள் தெரிந்திருத்தல் வேண்டும் |
| காவலர் - 01 பணியிடம்<br>சம்பள விகிதம் 11600-36800<br>(LEVEL -12/1) | 1.தமிழில் படிக்க மற்றும் எழுத தெரிந்திருக்க வேண்டும்.<br>2.எட்டாம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.<br>3.திருக்கோயில் பழக்க வழக்கம் / நடைமுறைகள் தெரிந்திருத்தல் வேண்டும் |
| **உபகோயில் – திருவாலங்காடு, அருள்மிகு வடாரண்யேஸ்வர சுவாமி திருக்கோயில்** | |
| தட்டச்சர்– 01 பணியிடம்<br>சம்பள விகிதம் (15300-48700)<br>(LEVEL - 15/1) | 1.பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்/ அரசால் அங்கீகரிக்கப்பட்ட அதற்கு இணையான கல்வித் தகுதி பெற்றிருக்க வேண்டும்.<br>2.அரசு தொழில்நுட்ப தட்டச்சர் தேர்வில் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும்.<br>3.தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் முதுநிலை தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும்.<br>4.கணினி பயன்பாடு மற்றும் அலுவலக தானியக்கத்தில் சான்றிதழ் படிப்பில் தேர்ச்சி அல்லது அதற்கு இணையான அரசால் அங்கீகரிக்கப்பட்ட படிப்பில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். (Computer Automation)<br>5. திருக்கோயில் பழக்க வழக்கம் / நடைமுறைகள் தெரிந்திருத்தல் வேண்டும் |
| மேளம் (தவில்) – 01 பணியிடம்<br>சம்பள விகிதம் (11600-36800) | 1. தமிழில் எழுத படிக்க தெரிந்திருத்தல் வேண்டும்.<br>2. யாதொரு சமய நிறுவனங்கள்/அரசு நிறுவனங்கள்/யாதொரு அரசால் அங்கீகரிக்கப்பட்ட |

| | |
|---|---|
| (LEVEL - 12/1) | யாதொரு நிறுவனங்களால் நடத்தப்படும் இசைப்பள்ளிகளிலிருந்து இது தொடர்புடைய துறையில் தேர்ச்சி பெற்றதற்கான சான்று<br>3. திருக்கோயில் பழக்க வழக்கம் / நடைமுறைகள் தெரிந்திருத்தல் வேண்டும் |
| **உபகோயில் – திருப்பாச்சூர், அருள்மிகு வாசீஸ்வர சுவாமி திருக்கோயில்** | |
| நாதஸ்வரம் - 01 பணியிடம்<br>சம்பள விகிதம் 15700-50000<br>(LEVEL - 16/1) | 1. தமிழில் எழுத படிக்க தெரிந்திருத்தல் வேண்டும்.<br>2. யாதொரு சமய நிறுவனங்கள்/அரசு நிறுவனங்கள்/யாதொரு அரசால் அங்கீகரிக்கப்பட்ட யாதொரு நிறுவனங்களால் நடத்தப்படும் இசைப்பள்ளிகளிலிருந்து இது தொடர்புடைய துறையில் தேர்ச்சி பெற்றதற்கான சான்று<br>3. திருக்கோயில் பழக்க வழக்கம் / நடைமுறைகள் தெரிந்திருத்தல் வேண்டும் |

# <u>விண்ணப்பத்திற்கான நிபந்தனைகள் மற்றும் பொதுவான தகுதிகள்</u>

1. விண்ணப்பதாரர் 01.07.2025 அன்று 18 வயது பூர்த்தி அடைந்தவராகவும் 45 வயது மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

2. விண்ணப்பதாரர் இந்து மதத்தை சார்ந்தவராக மட்டும் இருத்தல் வேண்டும்.

3. மேற்கண்ட பணியிடங்களுக்கு விண்ணப்பிப்பவர்கள் நன்கு ஆரோக்கியமான உடல் நிலையுடன், தீயபழக்க வழக்கங்கள் மற்றும் தொற்று நோயற்றவர் என்றும், நல்ல மனநிலை உடையவர் என்பதற்கான விவரங்கள் குறிப்பிட்டு மருத்துவர் சான்றுடன் விண்ணப்பிக்க வேண்டும்.

4. பணி நியமனம் அரசாணை எண் 114/ சுற்றுலா, மற்றும் அறநிலையங்கள் (RE4–2) துறை/நாள் 03.09.2020 மூலம் வெளியிடப்பட்ட தமிழ்நாடு இந்து சமய அற நிலையங்கள் பணியாளர்கள் (Conditions of Service) விதிகளின் படியானது. இந்த அரசாணையை இந்த அறிவிப்பின் பகுதியாக அறிந்து கொள்ளவும்.

(http://www.stationaryprinting.tn.gov.in/extraordinary/2020/362_Ex_III_1a.pdf என்னும் இணைப்பில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்)

TOURISM, CULTURE AND RELIGIOUS ENDOWMENTS DEPARTMENT THE TAMILNADU HINDU RELIGIOUS INSTITUTIONS EMPLOYEES (CONDITIONS OF SERVICE) RULES, 2020. (G.O.Ms.No 114, Tourism, Culture and Religious Endowments (RE4-2), 3rd September 2020, Aavani 18, Saarvari, திருவள்ளுவர் ஆண்டு – 2051)

5. இந்த பணி நியமன நடவடிக்கை அனைத்தும் ஏற்கனவே நடைமுறையில் உள்ள 1959-ம் வருடத்திய இந்து சமயம் மற்றும் அறக்கட்டளைகள் சட்டம் மற்றும் அதன் கீழ் ஏற்படுத்தப்பட்ட விதிகள், அரசாணைகள், சுற்றறிக்கைகள் மற்றும் நீதிமன்ற உத்திரவுகளுக்கும் கட்டுப்பட்டதாகும்.

6. வேலை வாய்ப்பு கோரும் விண்ணப்பதாரர் ஒரு பதவிக்கு ஒரு விண்ணப்பம் என்கின்ற அடிப்படையில் மட்டுமே விண்ணப்பிக்க வேண்டும்.

7. விண்ணப்ப படிவம், தகுதி விவரங்கள், நிபந்தனைகள் மற்றும் இதர விவரங்கள் அடங்கிய விண்ணப்ப படிவத்தினை, விண்ணப்பதாரர் அலுவலக நாட்களில், அலுவலக நேரங்களில் 08.10.2025 முதல் 04.11.2025 பிற்பகல் 5.45 மணி வரை நேரில் வந்து கேட்டு, தெரிந்தும் பெற்றுக் கொள்ள கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். ( எக்காரணம் கொண்டும் அஞ்சல் வழியாக அனுப்பலாகாது)

8. நிர்ணயிக்கப்பட்ட காலக்கெடுவுக்குள் பெறப்படும் விண்ணப்பங்கள் மட்டுமே பரிசீலனைக்கு ஏற்றுக்கொள்ளப்படும். விண்ணப்பதாரர்களால் வழங்கப்படும் சான்றுகள் அனைத்தும் சம்பந்தப்பட்ட துறைகளின் பரிசீலனைக்கு உட்படுத்தப்படும்.

9. இந்த விண்ணப்ப விளம்பர அறிவிப்புக்கு முன்னதாக வரப்பெற்ற வேலை வாய்ப்பு வேண்டி தனி நபர்களால் திருக்கோயில் நிர்வாகத்திற்கு மனு செய்த விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. அதற்கான உரிமையும், பின் தொடர்ச்சியும் கோரலாகாது. அவ்வாறு வரப்பெறும் கோரிக்கைகள் ஏதும் ஏற்கலாகாது. அவை நிராகரிக்கப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

10. விண்ணப்பதாரர் தனது கோரிக்கை மனுவிலும், பூர்த்தி செய்து தாக்கல் செய்யும் விண்ணப்ப படிவத்திலும் எந்த பணியிடத்திற்கு விண்ணப்பம் செய்கிறார் என்பதை தெள்ளத் தெளிவாக அடித்தல் திருத்தம் ஏதுமின்றி குறிப்பிட வேண்டும்.

11. விண்ணப்பக் கட்டணம் எக்காரணம் கொண்டும் திரும்ப வழங்கலாகாது. (Non Refundable)

12. விண்ணப்பதாரர் நிலையான முகவரிக்கான சான்று, சாதி மற்றும் மதத்திற்கான சான்று, கல்வித்தகுதி, தொழில் நுட்ப கல்விதகுதி, இதர தகுதிகள் ஏதேனும் இருப்பின் அதற்கான சான்று, பிறந்த தேதி, முன் அனுபவ சான்று, ஆதார் அட்டை ஆகியவற்றின் ஒளி நகல்கள் விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்பப்பட வேண்டும்.

13. விண்ணப்பதாரர் தான் கடைசியாக பயின்ற பள்ளி / கல்லூரி நிறுவனத்திடமிருந்து சான்றொப்பமிட்டு பெறப்பட்ட நன்னடத்தைக்கான சான்றிதழும், இந்த விளம்பர தேதிக்கு பின் இரண்டு அரசு அலுவலரிடமிருந்து பெறப்பட்ட நன்னடத்தை சான்றிதழும் ஆக மூன்று நன்னடத்தை சான்றிதழ்களுடன் விண்ணப்ப படிவத்துடன் இணைத்து அனுப்பப்பட வேண்டும்.

14. நீதிமன்றத்தில் தண்டனை அடைந்தவர்கள், நன்னடத்தைக்காகவோ அல்லது அமைதியை காப்பாற்றவோ ஜாமீனில் கட்டுப்படுத்தப்பட்டவர்கள், பட்டகடனை தீர்க்க முடியவில்லை என நீதிமன்றத்தில் தீர்ப்பளிக்கப்பட்டவர்கள், இதர நிறுவனங்களிலிருந்தும், திருக்கோயில்களிலிருந்தும், பணியிலிருந்து விலக்கப்பட்டவர்கள், திருக்கோயிலுக்கு எதிராக வழக்கு தொடர்ந்தவர்கள் மற்றும் அவரது வாரிசுதாரர்கள் போன்றோர் விண்ணப்பிக்க தகுதியற்றவர்கள் ஆவர்.

15. திருக்கோயிலுக்கு சொந்தமான சொத்துக்களை ஆக்கிரமித்து, அனுபவித்து வருபவர்கள், திருக்கோயிலுக்கு பாக்கி வைத்துள்ளவர்கள், திருக்கோயிலுக்கு இழப்பு ஏற்படுத்தியவர்கள் விண்ணப்பிக்க தகுதியற்றவர்கள். எதிர்காலத்தில் கண்டறியப்பட்டால் அவர்கள் பணி நியமனம் இரத்து செய்யப்படுவதுடன் நம்பிக்கை மோசடி அடிப்படையில் குற்றவியல் நடவடிக்கை மேற்கொள்ள நேரிடும்.

16. இந்த வேலைவாய்ப்பு அறிவிப்பில் காணும் பணியிடங்களுக்கு திருக்கோயிலின் புனிதத்தன்மை, பாரம்பரியம், நடைமுறை பழக்க வழக்கங்களுக்கு உட்பட்டு நல்லொழுக்கம் உள்ளவர்கள் மட்டும் தேர்ந்தெடுக்கப்படுவர். புகை பிடித்தல், லாகிரி வஸ்துக்கள் உபயோகிப்பவர்கள், இருதாரம் உள்ளவர்கள், மது அருந்துபவர்கள் உள்ளிட்டோர் தகுதியற்றவர்கள் ஆவர்.

17. இந்த விளம்பர அறிவிப்பிற்கு முன்னர் வரப்பெற்ற வேலைவாய்ப்பு கோரும் விண்ணப்பங்களும், மற்றும் இந்த விளம்பர அறிவிப்பினில் குறிப்பிட்ட கடைசி தேதியான 05.11.2025 பின்னர் வரப்பெறும் விண்ணப்பங்களும், விண்ணப்பத்தில் உரிய காலங்கள், தகவல்கள், முழுமையாக பூர்த்தி செய்யப்படாமலும் தேவையான சான்றுகள் இணைக்கப்படாமலும் வரப்பெறும் விண்ணப்பங்கள் எவ்வித பரிசீலனைக்கும் எடுத்துக்கொள்ளப்படமாட்டாது.

18. விண்ணப்பதாரர் தான் வசிக்கும் பகுதிக்கு உட்பட்ட காவல் நிலையத்தில் தன் மீது எந்த ஒரு குற்ற வழக்கும் நிலுவை இல்லை என்பதற்கான Online-ல் பெறப்பட்ட காவல்துறை சான்றினை விண்ணப்பத்துடன் சமர்ப்பிக்க வேண்டும்.

19. ஒவ்வொரு விண்ணப்பத்தையும் முழுமையாக பூர்த்திசெய்து அதற்கான சான்றுகளுடன் கவரின் மீது இணை ஆணையர் / செயல் அலுவலர், அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில், திருத்தணிகை – 631 209,

திருவள்ளூர் மாவட்டம் என்ற முகவரிக்கு விண்ணப்பிக்கப்படும் பதவியின் பெயரை குறிப்பிட்டு அஞ்சல் துறையின் பதிவு அஞ்சல் ஒப்புதல் மூலம் மட்டுமே அனுப்பப்பட வேண்டும்.

20. விண்ணப்பங்களை பரிசீலித்து தகுதியுள்ள விண்ணப்பதாரர்களுக்கு மட்டும் நேர்காணலுக்கான அழைப்பு அனுப்பப்படும். அதுசமயம், விண்ணப்பதாரர்கள் நேர்காணல் நடைபெறும் நாளில் குறிப்பிட்ட நேரத்திற்கு முன்னதாக, உரிய அசல் சான்றிதழ்களுடன் தமது சொந்த செலவில் நேரில் ஆஜராக வேண்டும்.

21. விண்ணப்பதாரர்களால் அளிக்கப்படும் சான்றுகள் அனைத்தும் சம்மந்தப்பட்ட துறைகளின் பரிசீலனைக்கு உட்படுத்தப்படும் .

22. தேர்வு செய்யப்படும் நபர், காவல் துறையின் மூலம் விசாரணை செய்து அன்னார் ஏதேனும் குற்றவியல் நடவடிக்கைகளில் தொடர்புடையவரா அல்லது ஈடுபட்டவரா என்பது போன்ற விவரங்கள் அறிந்த பின்னர் சென்னை, இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் அங்கீகராத்திற்கு பின்பே பணி நியமனம் செய்யப்படுவர்.

23. தேர்வு செய்யப்படும் நபர் தமிழ்நாடு இந்து சமய அறநிலையத்துறை சட்டவிதிகளுக்கு உட்பட்டும், திருக்கோயிலில் ஆகம விதிகள், தொன்று தொட்டு கடைபிடிக்கப்பட்டு வரும் பழக்க வழக்கங்கள், நடைமுறைகள் மற்றும் நிர்வாகத்தில் அவ்வப்போது பிறப்பிக்கப்படுகின்ற உத்தரவுகளுக்கு உட்பட்டும், பணி செய்ய கடமைப்பப்பட்டவர்கள் ஆவர்.

24. தேர்வு செய்யப்படும் நபர்கள் தான் அளிக்கும் விவரங்கள் அனைத்தும் சரியானவை என உறுதி அளிக்க வேண்டும். தவறான தகவல்கள் அல்லது போலியான ஆவணங்கள் ஏதேனும் அளித்து ஆணை பெறப்படும் பட்சத்தில், எவ்வித முன்னறிவிப்பின்றி பணிநீக்கம் செய்யப்படுவர். மேலும், குற்றவியல் நடவடிக்கைகளுக்கும் உட்படுத்தப்படுவர்.

25. இந்த பணி நியமனங்கள் அனைத்தும் முற்றிலும் தற்காலிகமானது. தெய்வீகத்தாலும், இராஜீயத்தாலும் ஏற்படும் மாற்றங்களுக்கு திருக்கோயில் நிர்வாகம் பொறுப்பல்ல. இதர விவரங்கள் இத்திருக்கோயில் தலைமை அலுவலகத்தை அணுகி, அலுவலக நாட்களில், அலுவலக நேரங்களில் 08.10.2025 முதல் 04.11.2025 பிற்பகல் 5.45 மணி வரை நேரில் வந்து கேட்டு, தெரிந்து கொள்ள கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

26. விண்ணப்பத்தினை திருக்கோயில் நிர்வாக நலன் கருதி ஏற்கவோ நிராகரிக்கவோ திருக்கோயில் நிர்வாகத்திற்கு முழு அதிகாரம் உண்டு.

**இங்ஙனம்**

| | |
|---|---|
| திருமதி.க.ரமணி, பி.ஏ.பி.எல்., | திரு.சு.ஸ்ரீதரன் |
| இணைஆணையர்/செயல்அலுவலர் | அறங்காவலர் குழுத் தலைவர் |

அறங்காவலர்கள்

வி.சுரேஷ்பாபு, ஜி.உஷாரவி, கோ.மோகனன், மு.நாகன்



தமிழ்நாடு அரசு - இந்து சமய அறநிலையத்துறை

# அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், திருத்தணிகை.

விண்ணப்பதாரர் புகைப்படம் (Passport size)

## …………………………… காலி பணியிடத்திற்கான விண்ணப்பம்

| | | | |
|---|---|---|---|
| 1. | பெயர் (முழு பெயர்) | : | |
| 2. | தந்தை / கணவர் / பாதுகாவலர் பெயர் | : | |
| 3. | நிலையான முகவரி<br>(சான்று நகல் இணைக்கப்பட வேண்டும்) | | |
| 4. | 12 இலக்க ஆதார் அட்டை எண் குறிப்பிடவும்<br>(சான்று இணைக்கப்பட வேண்டும்) | : | |
| 5. | பாலினம் | : | |
| 6. | திருமணம் ஆனவரா? (ஆம் / இல்லை) | : | |
| 7. | சாதி மற்றும் மதம்<br>(சான்று இணைக்கப்பட வேண்டும்) | : | |
| 8. | பிறந்த தேதி<br>(18 வயது முதல் 45 வயதிற்கு உட்பட்டவர்கள் - சான்று இணைக்கப்பட வேண்டும்) | : | நாள் / மாதம் / வருடம் |
| 9. | வயது (01-07-2025 அன்று பூர்த்தி அடைந்த வயது குறிப்பிடுக) | : | |
| 10. | கல்வித் தகுதி<br>(சான்று இணைக்கப்பட வேண்டும்) | 1 | |
| | | 2 | |
| | | 3 | |
| 11. | கணினியில் தகுதி<br>(சான்று இணைக்கப்பட வேண்டும்) | 1 | |
| | | 2 | |
| | | 3 | |
| 12. | தொழில்நுட்ப தகுதிகள் உள்ளிட்ட பிற தகுதிகள் (சான்று இணைக்கப்பட வேண்டும்) | 1 | |
| | | 2 | |
| | | 3 | |
| 13. | இதர தகுதிகள் ஏதும் இருப்பின் அதன் விவரம் (சான்று இணைக்கப்பட வேண்டும்) | 1 | |
| | | 2 | |
| 14. | விண்ணப்ப கட்டணம் ரூ.100/- செலுத்தியதற்கான அசல் ரசீது இணைக்கப்பட்டுள்ளதா? ஆம் எனில் அதன் விவரம்.<br>(விண்ணப்ப கட்டணம் திரும்ப வழங்க இயலாது) | : | ரசீது எண் ……………………………………………<br>நாள் : ………………………… ரூ.………………… |

| | | | |
|---|---|---|---|
| 15. | **விண்ணப்பிக்கும் பணியில் முன் அனுபவம் இருப்பின் அதன் விவரம் :**<br>அ) திருக்கோயிலில் பணிபுரிந்த அனுபவம் | : | |
| | ஆ) பிற நிறுவனங்களில் பணிபுரிந்த அனுபவம்<br>(சான்று இணைக்கப்பட வேண்டும்) | : | |
| 16. | **இந்து சமய அறநிலையத்துறையின் ஆளுகையின் கீழ் உள்ள முதுநிலை அல்லாத திருக்கோயில் பணியாளர் எனில் அதன் விவரம் :**<br>அ) பெயர் | : | |
| | ஆ) தந்தை / கணவர் பெயர் | : | |
| | இ) பதவி | : | |
| | ஈ) பணியில் சேர்ந்த நாள் | : | |
| | உ) பணிபுரியும் திருக்கோயில் | : | |
| | ஊ) பணிபுரிந்து வருவதற்கான சான்று | : | |
| | ஏ) நன்னடத்தைச் சான்று | : | |
| 17. | **நன்னடத்தைச் சான்று :**<br>அ) இறுதியாக பயின்ற பள்ளி / கல்லூரியில் பெறப்பட்ட சான்று நகல் | : | 1 |
| | ஆ) இரண்டு அரசு அலுவலரிடம் 05-10-2025க்கு பின்னர் பெறப்பட்ட சான்று<br>(நகல் இணைக்கப்பட வேண்டும்) | | 2<br>3 |
| 18. | குற்றவியல் நடவடிக்கை இருப்பின் அதன் விவரம்<br>அ) பதிவு செய்யப்பட்டுள்ளதா?<br>ஆ) நிலுவையிலுள்ளதா?<br>இ) தண்டனை வழங்கப்பட்டுள்ளதா?<br>(காவல்துறை சான்று இணைக்கப்பட வேண்டும்) | : | <br>ஆம் / இல்லை<br>ஆம் / இல்லை<br>ஆம் / இல்லை |
| 19. | தொலைபேசி எண் | : | |
| | கைபேசி எண் | : | |
| | மின்னஞ்சல் முகவரி<br>(தனித்தனி, எழுத்தில் தெளிவாக குறிப்பிடவும்) | : | |

## உறுதிமொழி

.................................................... தந்தை / கணவர் / பாதுகாவலர் பெயர் .................................................... ஆகிய நான், இவ்விண்ணப்பத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள மேற்காணும் அனைத்து தகவல்களும், இணைக்கப்பட்டுள்ள ஆவணங்களும் சரியானவை என உறுதி கூறுகின்றேன். எதிர்காலத்தில் மேற்படி தகவல்கள் தவறானவை எனவும், இணைக்கப்பட்ட ஆவணங்கள் போலியானவை எனவும் தெரியவந்தால், என்மீது திருக்கோயில் நிர்வாகத்தால் எவ்வித முன்னறிவிப்பும் இன்றி பணி நீக்கம் செய்யவும், குற்றவியல் நடவடிக்கைகளுக்கு கட்டுப்படவும் சம்மதித்து உறுதி அளிக்கிறேன்.

நாள் :

இடம் :

விண்ணப்பதாரர் கையொப்பம்